# தினத்தந்தி (27.06.2025)




புகழூர் காகித ஆலை சார்பில்

## கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு பஸ் இயக்க ரூ.50 ஆயிரம் நிதி உதவி

நொய்யல், ஜூன்.27-

கரூர் மாவட்டம், ஆத்தூர் வடமலைக்கவுண்டனூரில் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான பள்ளி செயல்பட்டு வருகிறது. இங்கு குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி, பேச்சுப் பயிற்சி, உளவியல் பயிற்சி போன்றவற்றை வழங்கி வருகிறது. இதையடுத்து புகழூர் காகித ஆலையை சுற்றியுள்ள கற்றல் குறைபாடு உள்ள குழந்தைகள் பள்ளிக்கு சென்று வர ஏதுவாக வேலாயுதம்பாளையம், காகித ஆலை வழியாக சிறப்பு பஸ் இயக்குவதற்கு ஒரு பகுதி நிதியுதவியாக ரூ.50 ஆயிரம் காகித ஆலை சார்பில் வழங்கப்பட்டது. இதையடுத்து சிறப்பு பஸ் இயக்க தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. இதற்கு காகித ஆலையின் பொதுமேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தலைமை தாங்கி சிறப்பு பஸ் இயக்கத்தை தொடங்கி வைத்தார். இதில், காகித ஆலையின் துணை பொது மேலாளர் (பாதுகாப்பு) நாராயணன், உதவி பொது மேலாளர் (பாதுகாப்புத்துறை) சபாபதி, முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார், தாளாளர், ஆசிரியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

தினகரன் 26.06.2025

## கற்றல் குறைபாடுள்ள

# குழந்தைகளுக்கு இலவச பேருந்து சேவை

## தமிழ்நாடு காகித நிறுவனம் ஏற்பாடு

**வேலாயுதம் பாளையம் ஜூன் 26:** தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளின் கல்விக்கு உதவிக்கரம் வழங்கப்பட்டது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் பயிலும் மாணாக்கர்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மானவு சிறப்புப் பள்ளி, கரூர் மாவட்டம், ஆத்தூர், வடமலைக்கவுண்டனூரில் செயல்பட்டு வருகிறது. கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்புக் கல்வி, பேச்சுப் பயிற்சி. உளவியல் பயிற்சி போன்றவற்றை வழங்கி வருகிறது.

காகித ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளை கண்டுபிடித்து இப்பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்களுக்கு இயலாத நிலையை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் இச்சிறப்பு குழந்தைகளின் நலனுக்கும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பெற்றோர்களுக்கு உதவுவதற்காகவும், மானவு சிறப்புப் பள்ளிக்கு வேலாயுதம்பாளையம், காகித ஆலை வழியாக பள்ளிப் பேருந்து இயக்கவதற்குண்டான செலவீனத்தில் ஒரு பங்கினை நிதியுதவியாக மாதம் ரூ.50,000/- வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

மேற்கண்ட சிறப்பு குழந்தைகளுக்கான இலவச பேருந்து சேவையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன் காகித ஆலையில் இருந்து தொடங்கி வைத்தார். துணை பொது மேலாளர் (பாதுகாப்பு). நாராயணன், உதவி பொது மேலாளர் (பாதுகாப்புத்துறை) சபாபதி. முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் மற்றும் முனைவர். சிவக்குமார், தாளாளர். மானவு சிறப்புப் பள்ளி ஆகியோர் கலந்து கொண்டனர்.



கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கான இலவச பேருந்து சேவையை காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கே. கலைச்செல்வன் தொடங்கி வைத்தார்.

மாலை மலர் 26.06.2025




பேருந்து சேவையை மனிதவளம் பொது மேலாளர் கலைச்செல்வன் கொடியசைத்து தொடங்கி வைத்த போது எடுத்த படம்.

### டி.என்.பி.எல். ஆலை சார்பில்

# சிறப்பு பள்ளி குழந்தைகளுக்கு இலவச பேருந்து சேவை

வேலாயுதம்பாளையம், ஜூன்.26—

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் சார்பில் கற்றல் குறைபா டுள்ள குழந்தைகளின் கல்விக்கு உதவுதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவன சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் காகித ஆலையைச் சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் பயிலும் மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு அரசு பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது.

மானவு சிறப்புப் பள்ளி, கரூர் மாவட்டம், ஆத்தூர், வடமலைக்கவுண்டனூரில் செயல்பட்டு வருகிறது.

காகித ஆலையைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளை இப்பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்களுக்கு இயலாத நிலையை கருத்தில் கொண்டு இலவச பேருந்து சேவை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சி டி.என்.பி.எல். ஆலை வளாகத்தில் நடைபெற்றது.

காகித நிறுவனத்தின் பொது மேலாளர் (மனித வளம்) கலைச்செல்வன் பேருந்து சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் காகித நிறுவ னத்தின் பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல் வன், துணை பொது மேலா ளர் (பாது காப்பு). நாராய ணன், உதவி பொது மேலாளர் (பாது காப்புத்த துறை) சபாபதி, முதன்மை மேலாளர் (மனித வளம்).சிவக்குமார் மற்றும் மானவு சிறப்பு பள்ளி தாளாளர் சிவக்குமார் உடன் இருந்த னர்.

காலைக்கதிர் (27.06.2025)

# புகழூர் டி.என்.பி.எல்., உதவியுடன் சிறப்பு பள்ளிக்கு இலவச பஸ் வசதி

**கரூர், ஜூன் 27**




■ புகழூர், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்திலிருந்து வடமலைக் கவுண்டனூரில் உள்ள மானவு சிறப்புப் பள்ளிக்கு இலவச பஸ்சை பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தொடங்கி வைத்தார்.

புகழூர் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தில், சிறப்பு பள்ளிக்கு பஸ் இயக்க நிதி உதவி வழங்கப்பட்டது.

இதன்படி, பள்ளிக்கு பஸ் சேவையை, பொது மேலாளர் (மனிதவளம்) கலைச்செல்வன் தொடங்கி வைத்தார். சமூக மேம்பாட்டு திட்டத்தின் கீழ், காகித ஆலையை சுற்றி அமைந்துள்ள கிராமங்களில் பள்ளிகளின் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட, பல்வேறு உதவிகளை வழங்கி வருகிறது. இதில், கரூர் மாவட்டம், ஆத்தூர், வடமலை கவுண்டனூரில் சிறப்பு பள்ளி செயல்பட்டு வருகிறது. கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு சிறப்பு கல்வி, பேச்சு பயிற்சி, உளவியல் பயிற்சி போன்றவற்றை வழங்கி வருகிறது.

ஆலையை சுற்றியுள்ள பகுதிகளில், கற்றல் குறைபாடுள்ள குழந்தைகளை இப்பள்ளிக்கு அனுப்புவதில் பெற்றோர்களுக்கு இயலாத நிலையை கருத்தில் கொண்டு, வேலாயுதம்பாளையத்தில் இருந்து வடமலை கவுண்டனூரில் உள்ள மானவு சிறப்பு பள்ளிக்கு பஸ் இயக்குவதற்கு நிதியுதவியாக மாதம், 50 ஆயிரம் ரூபாய் வழங்க ஏற்பாடு செய்துள்ளது. இதன்படி, சிறப்பு குழந்தைகளுக்கான இலவச பஸ் சேவை தொடங்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சியில், துணை பொது மேலாளர் (பாதுகாப்பு), நாராயணன், உதவி பொது மேலாளர் (பாதுகாப்புத்துறை) சபாபதி, முதன்மை மேலாளர் (மனிதவளம்) சிவக்குமார் உள்பட பலர் பங்கேற்றனர்.